## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## MCOP NO. 702/2022

## Deposition of Witness for P.W.2

**Name** : திரு. பாலாஜி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-01-2024.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது எவர்சென்டாய் கன்ஸ்ட்ரக்ஷன் தனியார் நிறுவனத்தில் மனித வள துறையில் மேலாளராக சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற சாட்சி சம்மனின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இறந்து போன தினகரனின் சம்பளச் சான்று குறித்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது. இறந்து போன தினகரன் எங்கள் நிறுவனத்தில் டீம் லீடராக 2015 வரை பணிபுரிந்தார். அவருடைய மாதச் சம்பளம் கிராஸ் சேலரி ரூ. 71,511/- அதைத்தவிர போனஸ் மற்றும் வைப்புநிதி, பணிக்கொடை அனைத்தையும் சேர்த்தால் ரூ. 86,946/- மாதச் சம்பளமாக பெற்று வந்தார். நான் சாட்சியம் அளிப்பதற்காக வழங்கப்பட்ட அத்தாட்சி கடிதம் ம.சா.ஆ.7. எங்கள் நிறுவனத்தில் இறந்த தினகரனுக்கு வழங்கப்பட்ட சம்பளப் பட்டியல் மற்றும் கடிதம் ம.சா.ஆ.8 (ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). ம.சா.ஆ.8ன் அசல் தான் ம.சா.ஆ.1 ஆகும். ம.சா.ஆ.1 எங்கள் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட ஆவணம் தான். ம.சா.ஆ.1 க்கும், ம.சா.ஆ.8க்கு எந்த வித வித்தியாசமும் இல்லை. ம.சா.ஆ.1ல் ஆண்டு வருமானமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1ன் படி தான் இறந்த தினகரன் எங்கள் நிறுவனத்தில் மாதச் சம்பளம் பெற்று வந்தார். நான் எசர்சென்டாய் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்பதை காட்டக்கூடிய அடையாளச் சான்றின் நகல் ம.சா.ஆ.9 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு

செய்யப்படுகிறது). இறந்த தினகரன் அவருடைய தகுதியின் அடிப்படையில் மேலாளர் மற்றும் அதற்கு மேலும் பதவு பெற்று இருக்கலாம்.

**<u>2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

இறந்த தினகரன் எங்கள் நிறுவனத்தில் எப்போது பணியில் சேர்ந்தார் என்பதைக் காட்டக்கூடிய அப்பாயிண்ட் மெண்ட் ஆட்ரர், வருகைப் பதிவேடு, பதவு ஏற்பு கடிதம் தாக்கல் செய்யவில்லை. மாதச் சம்பளம் பட்டியலை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை ஊர்ஜிதம் செய்ய ம.சா.ஆ.8 கடிதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று ம.சா.ஆ.8 எங்கள் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படுகிறது . இறந்த நபரின் வங்கிக் கணக்கை தாக்கல் செய்யவில்லை. அவர் பி.இ. படித்துள்ளார் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை வங்கி மூலமாக சம்பளம் பெறுவதற்கு அனுப்பப்படும்.

சுமார் 8 ஆண்டுகள் எங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல ம.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.8 ல் உள்ள விவரங்கள் அவரது பணிப் பதிவேட்டை பார்த்து தாக்கல் செய்தோம். ஆனால் பணிப் பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன ஆவணத்தை எங்களிடம் கேட்கவில்லை. இறந்த நபருக்கு உண்டான Pay Slip ஐ நான் தாக்கல் செய்யவில்லை. எவர் சென்டாய் கன்ஸ்டிரக்ஷன் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. போர்டு ஆப் டைரக்டர் சென்னையில் உள்ளார் அவர் பெயர் சரவணன். ம.சா.ஆ.8ல் சரவணன் கையெழுத்து போடவில்லை. ம.சா.ஆ.1 மற்றும் 8ல் மனித வளத் துறையின் தலைமை அதிகாரி பரமசிவம் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார்.

இறந்த நபருக்கு உண்டான வருமான வரியை நாங்கள் பிடித்தம் செய்து படிவம் 16 அவருக்கு கொடுத்து விடுவோம். தினகரன் இறந்து விட்டதால் ம.சா.ஆ. 8ல் Whom So ever concern என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்த நபர் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்பதைக் காட்டக்கூடிய சம்பளப் பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை. ஏனெனில் சாட்சி சம்மனில் அந்த ஆவணத்தைக் மனுதாரர் தரப்பில் கோரவில்லை. சம்பளப் பதிவேடு நகல் எங்கள் நிறுவனத்தில் உள்ளது. அதனை நாங்கள் தாக்கல் செய்யவில்லை.

தினகரன் எங்கள் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என்றும், மா.சா.ஆ.1 மற்றும் 8 எங்களால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் எங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார் என்பதைக் காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 மற்றும் 8ஐ தவிர இறந்த நபர் எங்கள் நிறுவனத்தில் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்பதைக் காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் எங்கள் நிறுவனம் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் நிறுவனமே இல்லை என்றும், அங்கு தினகரன் வேலை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இது போன்ற ஒரு நிறுவனம் இயங்குகிறது என்பதைக் காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- பாலாஜி

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.